


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (1.10.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தின் துணைத் தலைவராக பொறுப்பேற்றுக் கொண்ட டாக்டர் எம்.பி. விஜயகுமார் (ஐ.ஏ.எஸ். ஓய்வு) சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



குஜராத்தின் பாவ்நகருக்கு புனித யாத்திரை சென்ற 26 தமிழர்கள் 26.09.2024 அன்று மலேஸ்ரீ ஆற்றில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில் சிக்கினர். தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுபடி தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் நலத்துறை சார்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விளைவாக 26 தமிழர்களும் மீட்கப்பட்டு 12655 நவஜீவன் அதிவிரைவு இரயில் மூலம் சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்திற்கு 01.10.2024 நேற்று அதிகாலை 05:00 மணியளவில் வந்தடைந்தனர். இந்நிலையில் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வருகை தந்த தமிழர்களை நலம் விசாரித்து அனைவரையும் சால்வை அணிவித்து வரவேற்று அரசின் சார்பில் வாகன வசதிகள் ஏற்பாடு செய்து அவர்களை சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைத்தார். உடன் வெளிநாடுவாழ் தமிழர் நல ஆணையர் கிருஷ்ண மூர்த்தி உள்பட அதிகாரிகள் உள்ளனர்

### இராணிப்பேட்டை மாவட்டக் கழகத்தினர்

# வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆர்.காந்தி வேண்டுகோள்!



இராணிப்பேட்டை, அக். 2 -

வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் தொடர்பாக இராணிப்பேட்டை மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் கழகத் தோழர்களுக்கு மாவட்ட கழக செயலாளர், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர். காந்தி விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, இந்திய தேர்தல் ஆணையம் வருகின்ற 01.01.2025 தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட புகைப்படத்துடன் கூடிய வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 29.10.2024 அன்று வெளியிட உள்ளது. இராணிப்பேட்டை மாவட்டத்திலுள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் 29.10.2024 முதல் 28.11.2024 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டள்ளது. இது தவிர தலைமைத் தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி, ஞாயிறு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 வரை சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன்வந்து வாக்காளர்கள் பட்டியலில் உள்ள தங்களது விவரங்களை சரி பார்த்து. விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்களர்களும். 1.1.2025 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க,நீக்க திருத்தங்கள் மேற்கொள்வ தற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் கொடுக்க வேண்டும். இதனடிப்படையில் 2025ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி 18வயது நிரம்பியவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம்பெறதா பெயர்களையும் புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும். தொகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

பட்டியலில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்கம் - படிவம் - 6, படிவம் 7

தவறுகள் நீக்கம்

சட்டமன்ற தொகுதிக்குள் திருத்தம், முகவரி மாற்றம், வாக்காளர் அட்டை நகல் -படிவம் 8

அயல் நாடு வாழ் வாக்காளர்களை சேர்க்க (NRI Voters) படிவம் - 6A

ஆதார் எண், வாக்காளர் அடையாள அட்டையுடன் இணைக்க படிவம் - 6B

மேலும் சேர்ப்பதற்கு இணையதளம் www.nvsp.in www.voterportal.gov.in

1.வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் 29.10.2024

2. பெயர்களைச் சேர்க்க, நீக்க,திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் 29.10.2024 முதல் 28.11.2024 வரை

3.சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள் தலைமை தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி, ஞாயிறு நாட்கள்.

4. இறுதி வாக்காளர் பட்டியலில் வெளியிடப்படும் நாள் 06.01.2025

மேலும் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களிலும், இராணிப்பேட்டை மாவட்டத்தை சார்ந்த நகர, ஒன்றிய, பேரூர் செயலாளர்கள், மாவட்ட அணியின் நிர்வாகிகள், ஊர் கிளை, உட்கிளை, வார்டு கிளை செயலாளர்கள் மற்றும் வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் இந்த பணியின் விவரத்தினை மாவட்டக் கழகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு: வாக்காளர் சேர்க்கும் பணியின்போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள BLA2க்கான மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC). இந்த பணியினை மழுமையாக ஈடுபட்டு 2026 சட்டமன்ற தேர்தல் வரை, தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள் BLO க்களுடன் உடனிருந்து கண்காணிக்க கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி தெரிவித்துள்ளார்.

### சூப்பர் ஸ்டார்

# ரஜினிகாந்த் விரைந்து நலம்பெற விழைகிறேன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, அக். 2 -

உடல் நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் விரைந்து நலம்பெற விழைகிறேன் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப் பதிவு வருமாறு:

**மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள நண்பர் சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் விரைந்து நலம் பெற விழைகிறேன்.**

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வீரபாண்டி ஆ. இராஜா
### அக்டோபர் 2 (2021)



**தனது இளமைப் பருவத்திலேயே தனது தந்தையாகிய வீரபாண்டியாரின் வழியில் கழகப் பணியாற்ற தொடங்கியவர்.**

**மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்டச் செயலாளர், தேர்தல் பணிக்குழுச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.**

**வீரபாண்டி சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்கள் அனைத்தையும் முன்னெடுத்து நடத்தியதோடு, அதில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “சேலம் மண்டலத்தில் கழகம் வளர்க்கும் வீரனாக வலம் வந்த தம்பி வீரபாண்டி ராஜா” என்று தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### சேலம் வருகைதரும் அமைச்சர் இரா.இராஜேந்திரனுக்கு சிறப்பான வரவேற்பு!

# தந்தை பெரியார் - அறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் சிலைகளுக்கு மாலை அணிவிப்பு!

## மாவட்டக் கழகச் செயலாளர்கள் எஸ்.ஆர்.சிவலிங்கம் - டி.எம்.செல்வகணபதி எம்.பி.- மாநகரச் செயலாளர் ரகுபதி கூட்டறிக்கை!

சேலம், அக். 2 -

சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம், மேற்கு மாவட்டச் செயலாளர் டி.எம். செல்வகணபதி எம்.பி., மாநகரச் செயலாளர் ரகுபதி ஆகியோர் சுட்டாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்கள் தன்னுடைய அமைச்சரவையில் கழக இளைஞரணி செயலாளர், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களை துணை முதலமைச்சராகவும், சேலம் மத்திய மாவட்ட கழக செயலாளரும், சேலம் வடக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினருமான இரா.ராஜேந்திரன் அவர்களை சுற்றுலாதுறை அமைச்சராகவும் நியமித்த தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியும், பணிவான வணக்கத்தையும் ஒருங்கிணைந்த சேலம் மாவட்ட தி.மு.கழகம் சார்பாக தெரிவித்து கொள்கிறோம்.

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களால் சுற்றுலாத்துறை அமைச்சராக இரா.ராஜேந்திரன் அவர்கள் நியமிக்க ப்பட்டு பொறுப்பு ஏற்ற பின், முதன்முதலாக 04.10.2024 வெள்ளிக் கிழமை காலை 11.00 மணி அளவில் சதாப்தி இரயில் மூலம் சென்னையிலிருந்து சேலம் வருகை தர உள்ளார்கள்.

அதுசமயம் சேலம் மாவட்ட தி.மு.க சார்பிலும், பொது மக்கள் சார்பிலும் அவருக்கு மிக பிரம்மாண்டமான முறையில் சேலம் இரயில் நிலையத்தில் வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அமைச்சர் அவர்கள் வரவேற்புகளை ஏற்றுக் கொண்டு சேலம் மத்திய பகுதியில் அமைந்துள்ள தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா முத்தமிழறிஞர்கலைஞர் வீர பாண்டியார் ஆகியோர்களது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

தொடர்ந்துபூலாவரியில் அமைந்துள்ள வீர பாண்டியார், நெடுஞ்செழியன், வீரபாண்டி . ஆ. இராஜா ஆகியோர் நினைவிடம் சென்று மலர்தூவி அஞ்சலி செலுத்தவுள்ளார்கள். பின்பு சேலம் அஸ்தம்பட்டியில் உள்ள சேலம் வடக்கு சட்டமன்ற தொகுதி அலுவலகத்திற்கு வருகைதந்து பொதுமக்களை சந்திக்க உள்ளார்.

ஆகவே மேற்கண்ட அனைத்து நிகழ்ச்சிகளிலும் ஒருங்கிணைந்த சேலம் மாவட்ட, மாநகர, பகுதி, கோட்ட, நகர, ஒன்றிய, பேரூர், கிளை மற்றும் வார்டு கழக செயலாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள், தலைமை கழக செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தேர்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழகத்தின் துணை அமைப்புகளான அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக தோழர்கள், கழக முன்னோடிகள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் கூட்டாக அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

### தி.மு.க. 15ஆவது பொதுத்தேர்தல்

# வேலூர் மாவட்டம், குடியாத்தம் வடக்கு ஒன்றிய துணைச் செயலாளர் பொறுப்புக்கான தேர்தல் - வேட்புமனு தாக்கல்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், வேலூர் மாவட்டம், குடியாத்தம் வடக்கு ஒன்றிய துணைச் செயலாளராக (பொது) தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.சரவணன்மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட காரணத்தால்;

வேலூர் மாவட்டம், குடியாத்தம் வடக்கு ஒன்றிய துணைச் செயலாளர் (பொது) பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, அக்டோபர் 5 (சனிக் கிழமை) அன்று ரூ.1000/ வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

**தகுதி விவரம்**

ஒன்றியக் கழக நிர்வாகப் பொறுப்புக்குப் போட்டியிடுவோர் அவர்கள் வேட்புமனுக்களில் முன்மொழிபவரும், வழிமொழிபவரும் அந்த ஒன்றியத்திற்கு கிளைக் கழகங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கிளைச் செயலாளராகவோ, பேரூர்ச் செயலாளராகவோ, ஒன்றியப் பிரதிநிதியாகவோ இருத்தல் வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.25/ வீதம் தலைமைக் கழகத்தில் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 01.10.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

### ஈரோடு வடக்கு மாவட்டம்

# நகரம் மற்றும் பேரூர்க் கழகத்திற்குட்பட்ட வார்டு கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களால் அமைக்கப்பட்ட “தி.மு.க. ஒருங்கிணைப்புக் குழுக்” கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவின்படி, வரவிருக்கும் 2026 சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் பொருட்டு, ஈரோடு வடக்கு மாவட்டத்தில் உள்ள நகர, பேரூர்களில் உள்ள வார்டுகளில், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிட, கீழே குறிப்பிட்டுள்ள நகரம் மற்றும் பேரூர் வார்டுக் கழக பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்கள்.

**சத்தியமங்கலம் நகரம்**

23வது வார்டு கழகப் பொறுப்பாளராக த.கிரிவேல் (76, அண்ணாநகர், தேள்கரடு, ரங்கசமுத்திரம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்) அவர்களும்;

26வது வார்டு கழகப் பொறுப்பாளராக எஸ்.குமார், (69, மீனவர் வீதி, கூத்தனூர், ரங்கசமுத்திரம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்) அவர்களும்;

**அம்மாபேட்டை பேரூர்**

அம்மாபேட்டை பேரூர், 14வது வார்டு கழகப் பொறுப்பாளராக ஆ.மோகன் ராஜ், (முனியப்பன் கோவில் வீதி, கோபி வீதி, அத்தாணி, ஈரோடு மாவட்டம்) அவர்களும்;

**பி.மேட்டுபாளையம் பேரூர்**

பி.மேட்டுபாளையம் பேரூர், 10வது வார்டு கழகப் பொறுப்பாளராக மா.ஹரிஹரசுதன், (வ.உ.சி.வீதி, பி.மேட்டுபாளையம், ஈரோடு மாவட்டம்) அவர்களும்;

**கொளப்பலூர் பேரூர்**

கொளப்பலூர் பேரூர், 15வது வார்டு கழகப் பொறுப்பாளராக ப.கோவிந்தன் (29/21, சானார்பாளையம், கொளப்பலூர், ஈரோடு மாவட்டம்) அவர்களும்;

**அரியப்பம்பாளையம் பேரூர்**

அரியப்பம்பாளையம் பேரூர், 8வது வார்டு கழகப் பொறுப்பாளராக அ.சுரேஷ் குமார் (4, அண்ணா வீதி, அரியப்பம்பாளையம், ஈரோடு மாவட்டம்) அவர்களும் நியமிக்கப்படுகிறார்கள்.

மேற்குறிப்பிட்ட வார்டு கழகங்களில் ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பிற நிர்வாகிகள் அவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 01.10.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.